මධ්‍යම පළාත් සභාවේ කලාප අධ්‍යාපන කාර්යාලය- මාතලේ
மத்திய மாகாண சபையின் வலயக் கல்விக் காரியாலயம் - மாத்தளை
ZONAL EDUCATION OFFICE OF CENTRAL PROVINCIAL COUNCIL- MATALE

# e-Learning Programme - 2020

| Grade -09 | Assignment - 01 | History |
|---|---|---|

☞பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

01. இலங்கைக்கு வந்த முதலாவது போர்த்துக்கேயன் யார்?
    1) அல்புகூர்கே 2) லொரன்ஸோ டி அல்மெய்டா
    3) கொலம்பஸ் 4) பிரான்சிஸ்கோ டி அல்மெய்டா

02. போர்த்துக்களின் பிரதான துறைமுகமாவது.
    1) லிஸ்பன் 2) தாமிரலிப்தி 3) மெட்ரிட் 4) லண்டன்

03. **VOC** என்பது யாது?
    1) போர்த்துக்கேய மத்திய நிலையம்
    2) ஒல்லாந்தர் நாணயம்
    3) ஒல்லாந்தர் கிழக்கிந்திய வர்த்தக சங்கம்
    4) போர்த்துக்கள் கோட்டை

04. ஒல்லாந்தருடன் ஒப்பந்தம் செய்த 1வது கண்டிய மன்னன்?
    1) 1ம் ராஜசிங்கன் 2) 1ம் விமலதர்மசூரியன்
    3) செகரத் 4) 2ம் விமலதர்ம சூரியன்

05. கியூ கடிதத்துடன் தொடர்புடைய ஒல்லாந்து மன்னன்
    1) 5ம் வில்லியம் 2) 3ம் வில்லியன்
    3) நெப்போலியன் 4) கியூ

06. இலங்கையின் கிழக்கு கரையில் அமைந்துள்ள இயற்கைத்துறைமுகம்?
    1) மகாதித்த 2)திருகோணமலை
    3) மகாம 4) மட்டக்களப்பு

07. கீழைத்தேசத்தில் ஒல்லாந்த மத்திய நிலையம் அமைந்திருப்பது?
    1) இந்தியா – கோவா 2) பாண்டிச்சேரி
    3) யாவா – பட்வேியா 4) மும்பை

08. 1638ம் ஆண்டு ஒல்லாந்தருக்கும் கண்டிய மன்னனுக்கும் இடையிலான உடன்படிக்கை எவ்வாறு அழைக்கப்பட்டது.

1) வெஸ்டர்வோல்ட் 2) ஹங்குரன்கெத்த

3) கியூ 4) மல்வானை

09. இலங்கையின் இறுதி ஒல்லாந்த ஆளுனர் யார்?

1) வான் ஏங்கல் பேக் 2) வில்ஹம் பல்க்

3) சீ பால்ட் தி வீட் 4) மெக்டோவல்

10. 1762ம் ஆண்டு இலங்கைக்கு வந்த முதலாவது ஆங்கிலேயத் தூதுவன்

1) சீ பாட் தி வீட் 2) மெக்டோவல்

3) ஜோன் பைபஸ் 4) ஜோன் டொயிலி

☞இடைவெளியை நிரப்புக.

1) பிரான்சிய புரட்சியின் பின்னர்................................குடியரசு எனும்ஆட்சி முறை பிரான்சில் உருவாக்கப்பட்டது.
2) 1795ல் பிரான்சியரால் முதன் முதலாக இலங்கையில்.......................... எனும் இடம் கைப்பற்றப்பட்டது.
3) ஒல்லாந்தரின் பதிவு புத்தகங்கள்...........................எனப்பட்டது.
4) ....................................மன்னன் கண்டியை ஆட்சி செய்த போது கரையோரப் பிரதேசங்கள் பிரித்தானியரால் கைப்பற்றப்பட்டது.
5) ...........................கால்வாய் ஒல்லாந்தரால் உள்நாட்டு போக்குவரத்திற்காக பயன்படுத்தப்பட்டது.

☞பொருத்தமான விடையின் எழுத்தை அடைப்புக்குள் இடுக.

1) வெஸ்டர் வோல்ட் உடன்படிக்கை **( )** **a** பாண்டிச்சேரி
2) ஸ்கொலகல் கமிஷன் **( )** **b** பகன்னு சாமி
3) எஸ்பிரிடல் **( )** **c** 1638ம் ஆண்டு
4) பிரான்சிய வர்த்தக மத்திய நிலையம் **( )** **d** பாடசாலை மேற்பார்வை
5) சிறி விக்ரம இராஜசிங்கன் **( )** **e** வைத்தியசாலைகள்

මධ්‍යම පළාත් සභාවේ කලාප අධ්‍යාපන කාර්යාලය- මාතලේ
மத்திய மாகாண சபையின் வலயக் கல்விக் காரியாலயம் - மாத்தளை
ZONAL EDUCATION OFFICE OF CENTRAL PROVINCIAL COUNCIL- MATALE

e-Learning Programme - 2020

| Grade -09 | Assignment - 01 | History |
|---|---|---|

வழங்கப்பட்டுள்ள வினாத் தொகுதிகள் ஐந்திணை தெரிவு செய்து விடையளிக்குக.

01. 1. ஐரோப்பியர் கீழைத்தேசத்தில் இருந்து பெற்றுக்கொண்ட வர்த்தகப் பொருட்கள் நான்கினை குறிப்பிடுக.

2. ஒல்லாந்தருடன் உறவுகளை மேற்கொண்ட கண்டிய அரசர்கள் 2 பேரை குறிப்பிடுக.

3. வெஸ்ட்டர் வோல்ட் உடன்படிக்கையின் நிபந்தனகள் இரண்டினைக் குறிப்பிடுக.

(4+4+4=12)

02. 1. ஒல்லாந்தரினால் உருவாக்கப்பட்ட நீதி மன்றங்கள் நான்கினை குறிப்பிடுக.

2. ஒல்லாந்தரினால் கண்டிய மன்னனுக்கு வழங்கப்பட்ட பரிசுப் பொருட்கள் நான்கினை குறிப்பிடுக.

3. கண்டிய மன்னனான 1ம் விமலதர்ம சூரியனைச் சந்தித்த ஒல்லாந்த தூதுவர்கள் இருவரைக் குறிப்பிடுக.

(4+4+4=12)

03. 1. பிரித்தானியரின் கீழைத்தேய வர்த்தக மத்திய நிலையங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

2. பிரித்தானியர் இலங்கையைக் கைப்பற்ற எண்ணியமைக்கான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

3. கண்டிய அரசர்களை சந்தித்த பிரித்தானிய தூதுவர்கள் இருவரைக் குறிப்பிடுக.

(4+4+4=12)

04.1. பின்வருவனவற்றுடன் தொடர்புடைய நபர்களை குறிப்பிடுக.

**A.** ''இஞ்சியைக் கொடுத்து மிளகாய்வாங்கியது போல'' எனும் பழமொழியுடன் தொடர்புடைய மன்னன்

**B.** இலங்கையின் கரையோர பிரதேசங்களுக்கான முதலாவது பிரித்தானிய ஆளுனர்.

**C.** பிரித்தானிய கரையோரப் பிரதேசங்களை ஆட்சி செய்த போது கண்டியை ஆட்சி செய்த மன்னன்

**D.** கீழைத்தேசத்திற்கு வந்த முதலாவது போர்த்துக்கேயர்.

2. திருகோணமலை துறைமுகத்தின் முக்கியத்துவங்கள் இரண்டினை குறிப்பிடுக.

3. 1796 – 1798 வரை பிரித்தானியரால் அறிமுகப்படுத்தப்பட்ட சென்னை ஆட்சிமுறையின் பண்புகள் இரண்டினைக் குறிப்பிடுக.

(4+4+4=12)

05. 1. ஒல்லாந்த ஆட்சியின் போது அறிமுகப்படுத்தப்பட்ட 3 கொமாண்டரிகளும் எவை?

2. ஒல்லாந்தரினால் பயன்படுத்தப்பட்ட 3வகையான தோம்புகளும் எவை?

3. உள்நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு ஒல்லாந்தரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் இரண்டிணை உதாரணங்களுடன் குறிப்பிடுக.

(4+4+4=12)

06. பின்வரும் இடங்களை இலங்கைப்படத்தில் குறித்துக் காட்டுக.

1) காலி
2) கொழும்பு
3) யாழ்ப்பாணம்
4) திருகோணமலை
5) மட்டக்களப்பு
6) கண்டி
7) மன்னார்
8) அநுராதபுரம்
9) பதுளை

(1 ½ x 9 = 12)